**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No.591/2015</u>**

**<u>வழக்கு சாட்சி PW-1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாஸ்தா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கணபதி | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | கடையம் | வயது | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 10th, 2025.

**(எதிரி ஆஜரில்லை. எதிரி மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 299ன் கீழ் நடவடிக்கைக்காக சாட்சி விசாரணை செய்யப்படுகிறார்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கடையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 08.10.2007 ல் நானும், எனது மனைவியும் வயற்காட்டிற்கு வேலைக்கு சென்றோம். என்னுடைய பிள்ளைகள் பள்ளிக்கு சென்றார்கள். சாயங்காலம் மூன்றரை மணியளவில் நாங்கள் வயற்காட்டிலிருந்து திரும்ப வந்தோம். எங்களுடைய வீட்டு கதவு திறந்திருந்தது. வீட்டிற்குள் போய் பார்க்கும் போது, பீரோ எல்லாம் உடைக்கப்பட்டிருந்தது. பீரோவின் அறையிலிருந்து 2 செயின், 5 மோதிரம், ரூ.4000/-, வெள்ளிக்கொலுசு ஒரு ஜோடி, ஒரு ஜோடி கம்மல் ஆகியவை காணாமல் போயிருந்தது. பின்னர் நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். பின்னர், போலீசார் நகைகளை திருடிய நபர்களை பிடித்ததாக சொன்னார்கள். அந்த நபர்கள் என்னிடமிருந்து திருடிய தங்க நகைகளை உருக்கியதாக

போலீசார் சொன்னார்கள். எனக்கு மொத்தம் 65 கிராம் எடையுள்ள நகைகள் தொலைந்து போனது. ஆனால், உருக்கப்பட்ட தங்க நகை கட்டியை நான் நீதிமன்றத்திலிருந்து வாங்கிச் சென்றேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.11 18:09:03 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.591/2015**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரியா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சாஸ்தா | தொழில் | : | தனியார் வேலை |
| கிராமம் | : | கடையம் | வயது | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 10th, 2025.

**(எதிரி ஆஜரில்லை. எதிரி மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 299ன் கீழ் நடவடிக்கைக்காக சாட்சி விசாரணை செய்யப்படுகிறார்.)**

**முதல் விசாரணை :**

நான் கடையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சாஸ்தா என்னுடைய அப்பா. 08.10.2007 அன்று நான் பள்ளிக்கு சென்றேன். சாயங்காலம் 06.00 மணிக்கு வீட்டிற்கு வந்தபோது, எங்களது வீட்டில் கூட்டமாக இருந்தது. என்னுடைய வீட்டில் நகைகள் திருடு போனதாக அப்பா, அம்மா சொன்னார்கள். பின்னர் என்னுடைய அப்பா புகார் கொடுத்தார். போலீசார் நகைகள் உருக்கப்பட்டு தங்க கட்டிகளாக திருடியவர்கள் மாற்றியதாக சொல்லி, தங்க கட்டியை கைப்பற்றி கொடுத்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.11 18:09:11 +0530